## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்திய வானிலைத்துறை
### வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை
### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
### (21.10.2023 முதல் 25.10.2023)

**அறிக்கைஎண் 084/2023** **தேதி.20.10.2023**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 9°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

திருப்பூர் மாவட்டத்தின் மாவட்டத்தின் 17.10.23 முதல் 19.10.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் ஆகவும், 33°செ இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 91 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 44 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7-10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்குதிசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (17.10.2023 முதல் 19.10.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 25.10.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 17/10 | 18/10 | 19/10 | தேதி | நாள்-1 21/10 | நாள்-2 22/10 | நாள்-3 23/10 | நாள்-4 24/10 | நாள்-5 25/10 |
| 23.3 | 0.4 | 0.0 | மழை (மி.மீ) | 10 | 10 | 10 | 15 | 40 |
| 31 | 33 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 33 | 32 | 32 |
| 21 | 24 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 22 | 22 |
| 4 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டர்) | 6 | 6 | 6 | 5 | 5 |
| 91 | 86 | 70 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 84 | 84 | 84 | 82 | 82 |
| 50 | 47 | 44 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 48 | 48 |
| 7 | 10 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 8 | 8 |
| 90 | 90 | 70 | காற்றுவீசும் திசை | 70 | 70 | 70 | 90 | 90 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (21.10.2023 முதல் 25.10.2023)

வரும் நாட்களில்வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 84 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 48 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம்

மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பெங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பெட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| **21-10-2023** | 7.0 | 5.0 | 5.0 | 5.0 | 6.0 | 5.0 | 4.0 | 7.0 | 7.0 | 7.0 | 5.0 | 7.0 | 4.0 |
| **22-10-2023** | 7.0 | 5.0 | 4.0 | 5.0 | 5.0 | 4.0 | 5.0 | 6.0 | 6.0 | 7.0 | 4.0 | 7.0 | 5.0 |
| **23-10-2023** | 7.0 | 9.0 | 8.0 | 8.0 | 8.0 | 9.0 | 11.0 | 8.0 | 8.0 | 8.0 | 9.0 | 8.0 | 10.0 |
| **24-10-2023** | 14.0 | 19.0 | 20.0 | 15.0 | 17.0 | 22.0 | 18.0 | 15.0 | 14.0 | 13.0 | 22.0 | 13.0 | 15.0 |
| **25-10-2023** | 36.0 | 33.0 | 33.0 | 35.0 | 34.0 | 33.0 | 30.0 | 36.0 | 36.0 | 37.0 | 33.0 | 37.0 | 31.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வடகிழக்கு பருவமழை வரும் வாரத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. ஆதலால் வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் மிதமான மழையுடன் மணிக்கு 8-10 கி.மீ வரை வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.<br>மேற்குத்தொடர்ச்சி மலையினை ஒட்டியுள்ள பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். அதிகப்படியான மழைநீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிக்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி மானாவாரி பயிர்களில் பாடுவாசி விதைத்தல் மற்றும் களைதலின் மூலம் பயிர் எண்ணிக்கையினைப் பராமரிக்கலாம். |
| உளுந்து | வளர்பருவம் | இறவையில் விதைக்கப்பட்ட பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் மண்ணிலுள்ள அதிக ஈரத்தன்மையால் கொடிகிளைகள் வளர வாய்ப்புள்ளது. கிளைகளை வெட்டிவிடவும். |
| கரும்பு | வளர்பருவம் | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | பூக்கும் பருவம் | நிலவும் வானிலையால் பருத்தியில் பேக்டீரியா இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு எக்டருக்கு ஸ்டெரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்கிளின் கலந்த கலவை 100 கிராம் + காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1200 கிராம் கலந்து தெளிக்கவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 8-10 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப் படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| பப்பாளி | | தொடர் மழையின் காரணமாக பப்பாளி மரத்தில் வேர் அழுகல் நோய் வர வாய்ப்புள்ளது. எனவே தக்க வடிகால் வசதி செய்து 1 சத போர்டோ கலவையை வேர் நனையும்படி ஊற்றவும். |
| கால்நடை | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும்.<br>வரும் நாட்களில் மழையுடன் அதிக காலை மற்றும் மாலை காற்றின் ஈரப்பதம் எதிர்ப்பார்க்கப்படுவதால் மாடுகளுக்கு மற்றும் கோழிகளுக்கு உலர்ந்த தீவனங்கள் கொடுக்கவும். |

## குறுஞ்செய்தி

- மணிக்கு 8-10 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப் படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**